3. அரசினர் தீர்மானம்.

நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன :—

இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின் கீழ் இனம் 2–ல் வருகின்ற (1) 1980 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு,(2)1980ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயவாரம் செலுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, (3) 1980 ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண்மை நிலங்கள் நிர்வாகத்தை முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, (4) 1980 ஆம் ஆண்டு வணிகப் பயிர்கள் வரி விதிப்பு (ரத்து) சட்ட முன்வடிவு, (5) 1980 ஆம் ஆண்டு கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி தனி நன்செய் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி (திருத்த) சட்ட முன்வடிவு ஆகியவைகள் ஆளுநர் பேரு ரைககு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும் என்று வருகின்ற இனம் 1–க்கு முன்னால் எடுத்துகொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

[முற்பகல் 9.10]

திரு அ. ரகுமான்கான் : தலைவர்களே. பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அனுமதித்துக்கொண்டிருந்தால் அவையின் நேரம் வீணாகிறது. அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குச் சாந்தம் உண்டாக்குவது உறுப்பினர்களுடைய கடமை, ஆகவே உறுப்பினர்கள் தான் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.